சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை – மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களின் செயல் எல்லைகள் – பட்டுக்கோட்டை மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தின் செயல் எல்லையிலிருந்து அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களைப் பிரித்தல் - பவானி சாகர் மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தின் செயல் எல்லையின் கீழ் கொண்டு வருதல் – ஆணையிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா3)துறை

அரசு ஆணை (நிலை) எண்.11

நாள்: 27.01.2010
தை 14,
திருவள்ளுவர் ஆண்டு 2041
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 41 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(பரா-3) துறை, நாள் 12.3.08.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடித எண். 2486/2010/Trg-2 நாள் .01.2010.

----

ஆணை:

தமிழ் நாட்டில் எஸ்.வி. நகரம், பட்டுக்கோட்டை, கிருஷ்ணகிரி, டி.கல்லுப்பட்டி மற்றும் பவானி சாகர் ஆகிய ஐந்து இடங்களில் மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களின் பணியாளர் அமைப்பு ஒரே மாதிரியாக இருக்கும் நிலையில் அந்நிறுவனங்களின் பணிப்பளுவும் சீராக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். ஆனால் பட்டுக்கோட்டை மற்றும் எஸ். வி. நகர மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை சராசரியைவிட அதிகமாக உள்ளது. பவானி சாகர் மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை சராசரியை விட குறைவாக உள்ளது. எஸ்.வி. நகர மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவன செயல் எல்லைக்குள் காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர், கடலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்கள் உள்ளன. இம்மாவட்டங்கள் மற்ற மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களிலிருந்து வெகு

தொலைவில் உள்ளதால், இந்நிறுவனத்தின் செயல் எல்லைக்குள் வரும் மாவட்டங்கள் அப்படியே தொடரலாம். பட்டுக்கோட்டை மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தின்

(கு.பி.பா)



பணிப்பளு அதிகமாக உள்ளதால், அதன் செயல் எல்லையில் உள்ள அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களைப் பிரித்து பவானி சாகர் மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவன செயல் எல்லையின் கீழ் கொண்டு வர ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனத்துடன் பரிசீலித்து, அதனை ஏற்றுக் கொள்ள முடிவு செய்து, மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களுக்கிடையே பணியினை சமமாக பகிர்ந்தளிக்கும் வகையில் அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களை பட்டுக்கோட்டை மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தின் செயல் எல்லையிலிருந்து பிரித்து பவானி சாகர் மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தின் செயல் எல்லையின் கீழ் கொண்டு வர அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:

ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை-15
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(பயிற்சி), சென்னை-15
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், அரியலூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், பெரம்பலூர் மாவட்டம்.
இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், மறைமலைநகர், காஞ்சிபுரம் மாவட்டம்.
முதல்வர், மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.
முதல்வர், மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், பவானிசாகர், ஈரோடு மாவட்டம்.
முதல்வர், மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், எஸ்.வி. நகரம், திருவண்ணாமலை மாவட்டம்.
முதல்வர், மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், டி. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.
முதல்வர், மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், கிருஷ்ணகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

<u>நகல்</u>

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் துறை(பயிற்சி), சென்னை-9
நிதித்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.